# தகைசால் தமிழரே! தமிழ்நாடே தங்களை வாழ்த்துகிறது!

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் - தோழர் நல்லகண்ணு பிறந்தநாளையொட்டி – முதல்வர் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, டிச. 27-**

**விடுதலைப் போராட்ட வீரர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் தோழர் நல்லகண்ணு அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாளையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், "தகைசால் தமிழரே! தமிழ்நாடே தங்களை வாழ்த்துகிறது!" என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வரின் வலைதளப் பதிவு வருமாறு:-

போராட்டம் தொண்டு பொதுநலன், இதுவே தோழர் நல்லகண்ணு அய்யா அவர்களின் நூறாண்டுகால வாழ்க்கைப் பக்கங்களில் நிறைந்திருக்கும் சரிதம்!

எளிமையான வாழ்வுக்குச் சொந்தக்காரர் என்று சொல்வதைவிட, பொதுவுடைமைக் கருத்தியலுக்காகக் கடுமையான வாழ்வை எதிர்கொண்ட தீரர் அவர்!

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நூற்றாண்டு காணும் வேளையில், செங்குருதி சிந்திப் பாடுபட்ட தோழர் நல்லகண்ணு அய்யா அவர்களும் நூற்றாண்டு காண்கிறார்! இயக்கமே உயிர்மூச்சென வாழும் அவரைப் போற்றுவோம்!

தகைசால் தமிழரே, தமிழ்நாடே தங்களை வாழ்த்துகிறது! தங்களது வழிகாட்டுதலில் சமத்துவத்தை நோக்கிய பயணத்தில் முன்செல்கிறோம்!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



**அன்புமணி:** தி.மு.க.வுக்கு நிபந்தனையற்ற ஆதரவு தரத் தயார்!

**யாரு கேட்டா?**



**ஜி.கே.மணி:** பா.ஜ.க. கூட்டணியில் இருந்து விலகத் தயார்!

**விலகிக்கோ!**

### மதுரையில் – ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு

# இந்துஸ்தான் 'ஜிங்க்' நிறுவனத்துக்கு டங்ஸ்டன் சுரங்கம் தோண்டும் அனுமதியை ரத்து செய்க!

## ஒன்றிய அரசுக்கு – அமைச்சர் துரைமுருகன் வலியுறுத்தல்!

**சென்னை, டிச. 27 -**

**ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு, இந்துஸ்தான் ஜிங்க் நிறுவனம் டங்ஸ்டன் சுரங்கம் தோண்டுவதற்கான அனுமதியை ஒன்றிய அரசு ரத்து செய்ய வேண்டும் என்றும், இது தொடர்பாக ஒன்றிய அமைச்சகமும், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமியும் வெளியிட்ட அறிக்கைகளுக்குப் பதிலளித்து நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வலியுறுத்தி அறிக்கை வெளியிட்டுள்ளார்.**

டங்ஸ்டன் சுரங்கத் திட்டம் குறித்த எடப்பாடி பழனிசாமியின் குற்றச் சாட்டை மறுத்துள்ள நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள், டங்ஸ்டன் சுரங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ்நாடு அரசு சார்பில் கடந்த ஆண்டு அக்டோபர் 3ஆம் தேதி ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதியதாக தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில், டங்ஸ்டன் சுரங்க ஏலத்தில் பல அடிப்படையான குறைபாடுகள் உள்ளதை தெளிவாக சுட்டிக்காட்டியும், மாநில அரசு மட்டுமே கையாள வேண்டிய சட்டம்



ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் என்பதை விளக்கியும் ஒன்றிய சுரங்கத்துறை அமைச்சருக்கு கடந்த ஆண்டு அக்டோபர் 3ஆம் தேதி கடிதம் எழுதியதாகத் தெரிவித்துள்ளார்.

ஒன்றிய புவியியல் மற்றும் சுரங்க ஆணையர், மாநில சுரங்க அமைச்சகத்திற்கு அனுப்பிய கடிதத்தில், அரிட்டாப்பட்டியின் உயிரியல் பன்முகத்தன்மை பாரம்பரிய தளத்தை உள்ளடக்கியது என்பதைத் தவிர, வேறு எந்த நில விவரங்களும் குறிப்பிடப்படவில்லை என்றும், இருப்பினும், கனிமத் தொகுதியில் ஒரு பல்லுயிர் பாரம்பரிய தளம் இருப்பதை முழுமையாக அறிந்த ஒன்றிய சுரங்க அமைச்சகம் ஏல நடவடிக்கையை தொடர்ந்ததாகவும் அமைச்சர் துரைமுருகன் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது, ஒன்றிய சுரங்க அமைச்சகம் ஏலம் மட்டுமே விட முடியும் என்றும், சுரங்கத்திற்கான குத்தகையை மாநில அரசுதான் வழங்க வேண்டும் என்பதை ஒன்றிய சுரங்க அமைச்சகம் ஒப்புக் கொண்டுள்ளதாகவும் அமைச்சர் துரைமுருகன் கூறியுள்ளார்.

இந்த சுரங்க ஏலத்தால் ஏற்படும் சட்டம்ஒழுங்கு பிரச்சினைகளை மாநில அரசு மட்டுமே எதிர்கொள்ள வேண்டிய நிலையில், இதற்கான வருவாய் மாநில அரசுக்கு மட்டுமே சேரும் என்ற போது, மாநில அரசின் எதிர்ப்பை மீறி ஒன்றிய அரசு ஏன் ஏலத்தை மேற்கொண்டது என்று அமைச்சர் துரைமுருகன் கேள்வி எழுப்பி உள்ளார்.

இவ்விவகாரம் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியதைத் தொடர்ந்து சுரங்க ஏலத்தை மறுஆய்வு செய்ய ஒன்றிய சுரங்க அமைச்சகம் முடிவு செய்துள்ளது.

சுற்றுச்சூழல் மற்றும் ஆயிரக் கணக்கான மக்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு, இந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட் நிறு வனத்திற்கு சுரங்க ஒப்பந்தம் வழங்கியதை ஒன்றிய அரசு ரத்து செய்ய வேண்டும் என்று அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வலியுறுத்தி உள்ளார்.

# ஊட்டி வெப்பநிலை 3 டிகிரி செல்சியஸ்! வாட்டும் குளிரால் மக்கள் அவதி!

*ஊட்டி, டிச.27-*

*நீலகிரியில் கடந்த சில தினங்களாக பனிப்பொழிவு அதிகரித்திருந்த நிலையில் ஊட்டியில் நேற்றும் உறைபனி கொட்டியதால் குளிர் வாட்டி எடுக்கிறது. நீலகிரியில் ஆண்டு தோறும் அக்டோபர் மாதம் துவங்கி இரு மாதங்கள் நீர்பனி விழும். நவம்பர் மாதம் இறுதி வாரம் முதல் பிப்ரவரி மாதம் இறுதி வரையில் உறைபனி விழும். ஆனால், இம்முறை கடந்த ஜூன் மாதம் முதல் கடந்த வாரம் வரை மழை பெய்தது. இதனால், பனியின் தாக்கம் மிகவும் குறைந்து காணப்பட்டது. கடந்த ஒரு வாரமாக நீலகிரி மாவட்டத்தில் நீர் பனி கொட்டி வந்தது.*

*இந்நிலையில், கடந்த இரு தினங்களாக ஊட்டி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் தாழ்வான பகுதிகள் மற்றும் நீர் நிலைகளை ஒட்டியுள்ள பகுதிகளில் உறைபனி கொட்டியது.*

*ஊட்டி அரசு தாவரவியல் பூங்கா, ரேஸ்கோர்ஸ், தலைகுந்தா, பைக்காரா, கிளன் மார்கன், சூட்டிங்மட்டம் போன்ற பகுதிகளில் உறைபனி கொட்டி கிடந்தது.*

*இதனால், புல் மைதானங்கள் அனைத்தும் வெள்ளை கம்பளம் விரித்தாற்போல் காட்சியளித்தது. உறைப்பனி விழுந்த நிலையில் நேற்று காலையும் ஊட்டி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் கடும் குளிர் நிலவியது. தலைகுந்தா, பைக்காரா, கிளன்மார்கன் போன்ற பகுதிகளில் வெப்பநிலை 3 டிகிரி செல்சியசாக வெப்பநிலை பதிவாகியிருந்தது. பனி பொழிவு அதிகரித்துள்ள நிலையில், அதிகாலை நேரங்களில் குளிர் வாட்டுகிறது. பகல் நேரங்களில் வெயில் வாட்டினாலும், நிழல் தரும் இடங்களுக்கு சென்றால் குளிர் அதிகமாக உள்ளது. குறிப்பாக பைக்காரா, கிளன் மார்கன், தொட்டபெட்டா போன்ற பகுதிகளில் குளிரின் தாக்கம் சற்று அதிகமாக காணப்பட்டது.*



கிறிஸ்துமஸ் திருநாளை முன்னிட்டு தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குருவிகுளம் ஒன்றியம், மேலநீலிதநல்லூர் ஒன்றியம், சங்கரன்கோவில் ஒன்றியம், சங்கரன்கோவில் நகரம் ஆகிய பகுதிகளில் உள்ள 218 தேவாலயங்களுக்கு 80,000 ம் கேக்குகள் வழங்கப்பட்டது. அதன்படி குருவிகுளம் புனித சூசையப்பர் தேவாலயத்தில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. பங்குத்தந்தை சந்தியாயாகூ விடம் கேக்கை வழங்கினார். உடன் குருவிகுளம் தெற்கு ஒன்றிய செயலாளர் கடற்கரை, மாவட்ட விவசாய அணி தலைவர் பாலசுப்பிரமணியன் உள்பட பலர் உள்ளனர்.

### சென்னை அண்ணா பல்கலைக்கழக மாணவியின்

# பாலியல் புகார் மீது உடனடி நடவடிக்கை!

## பதிவாளர் அறிக்கை!

*சென்னை, டிச.27-*

*சென்னை அண்ணா பல்கலைக்கழக, கிண்டி பொறியியல் கல்லூரியில் பயிலும் மாணவி ஒருவர், ராஜா அண்ணாமலைபுரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் ஒன்றை அளித்துள்ளார்.*

*மேற்படி புகாரில், மாணவி தனது ஆண் நண்பருடன் கல்லூரி வளாகத்தின் பின்புறம் பேசிக்கொண்டிருந்த போது, அடையாளம் தெரியாத நபர்கள் இருவரையும் அச்சுறுத்தியதாகவும் பின்னர் அதே நபர்கள் தன்னுடைய நண்பரை தாக்கிவிட்டு தன்னை பாலியல் சீண்டலுக்கு முயன்றதாக மாணவி காவல் நிலையத்தில் 24.12.2024 அன்று புகார் தெரிவித்துள்ளார்.*

*இந்த புகாரின் பேரில் காவல்துறையினர் உரிய வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றார்கள். கோட்டூர்புரம் காவல் நிலைய உதவி ஆணையர் தலைமையில், ஆர்.ஏ.புரம் மகளிர் காவல் நிலையக் குழுவினருடன் வழக்கை தீவிர விசாரணை செய்து வருகின்றனர். இது தொடர்பாக அண்ணா பல்கலைக் கழக உள் புகார்க் குழுவினருக்கும் தற்போது தகவல் தெரிவிக்கப்பட்டு, குழுவின் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

*காவல்துறையினரின் விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று உயர்கல்வித்துறை உயர் அலுவலர்கள் அண்ணா பல்கலைக்கழக பதிவாளருக்கு அறிவுறுத்தியுள்ளார்கள். அதனடிப்படையில் பல்கலைக்கழக நிர்வாகம் காவல்துறையினரின் விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு அளித்து வருகிறது.*

*பல்கலைக்கழக வளாகத்தில் பாதுகாப்பு பணியாளர்கள் எப்போதும் பணியில் ஈடுபட்டுள்ளனர். கண்காணிப்பு கேமராக்களும் பொருத்தப்பட்டுள்ளது. இருப்பினும், இந்த விரும்பத்தகாத சம்பவம் நடந்துள்ளது. இதுபோன்ற சம்பவம் மீண்டும் நிகழாமல் இருக்க பல்கலைக்கழக அளவில் மேற்கொள்ள வேண்டிய கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.*

*அண்ணா பல்கலைக்கழகத்தினைப் பொறுத்தவரை அனைத்து மாணவர்களின் பாதுகாப்பு எப்போதுமே முதன்மையான முன்னுரிமையாக உள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம். குற்றவாளிகளை விரைவில் கண்டறிந்து கைது செய்ய அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக காவல் துறை அலுவலர்கள் உறுதியளித்துள்ளனர்.*

*இவ்வாறு சென்னை அண்ணா பல்கலைக்கழக பதிவாளர் முனைவர். பிரகாஷ் தெரிவித்துள்ளார்.*

### கிறிஸ்துமஸ் திருநாளை முன்னிட்டு

# சங்கரன்கோவில் தொகுதியில் 80 ஆயிரம் பேருக்கு கேக்குகள்!

## மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ., வழங்கினார்!

*தென்காசி, டிச.27-*

*கிறிஸ்துமஸ் திருநாளை முன்னிட்டு சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சங்கரன்கோவில் நகரம், சங்கரன்கோவில் ஒன்றியம், குருவிகுளம் ஒன்றியம், மேலநீலித நல்லூர் ஒன்றியம் ஆகிய 4 பகுதிகளில் உள்ள 218 தேவாலயங்களில் கிறிஸ்மஸ் திருநாளை முன்னிட்டு தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் 80,000 ம் கேக்குகளை சம்பந்தப்பட்ட தேவாலய பங்குத்தந்தைகளிடம் வழங்கினார்.*

*உலகமெங்கும் கிறிஸ்துமஸ் திருநாள் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது.திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட குருவிகுளம் ஒன்றியம், சங்கரன்கோவில் ஒன்றியம், மேலநீலிதநல்லூர் ஒன்றியம், சங்கரன்கோவில் நகரம் ஆகிய 4 பகுதிகளில் உள்ள 218 தேவாலயங்களுக்கு 80,000ம் கேக்குகளை தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. அந்தந்த பகுதிகளுக்கு தனித்தனியாக கழக பொறுப்பாளர்களை நியமித்து கேக்குகளை விநியோகம் செய்து கிறிஸ்துமஸ் திருவிழாவை கொண்டாடினார்.*

*அதனைதொடர்ந்து குருவிகுளம் புனித சூசையப்பர் தேவாலயத்திற்கு சென்று பங்குத் தந்தை சந்தியா யாகூ விடம் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ. ராஜா எம்.எல்.ஏ.கேக்குகள் வழங்கினார்.*

*நிகழ்ச்சியில் பங்கு பேரவை தலைவர் அல்போன்ஸ், பங்கு பேரவை பொருளாளர் சுந்தர்ராஜ், குருவிகுளம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் கடற்கரை, மாவட்ட துணை செயலாளர் ராஜதுரை, மாவட்ட வக்கீல் அணி துணை அமைப்பாளர் பிரபாகரன், மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் சங்கர்குமார்,மாவட்ட விவசாய அணி தலைவர் பாலசுப்பிரமணியன்,மாவட்ட விவசாய தொழிலாளர் அணி தலைவர் கலைச்செல்வன், ஒன்றிய துணை செயலாளர் மலைப்பட்டி மாடசாமி, ஒன்றிய துணை செயலாளர் பார்வதி, அழகாபுரி கிளை செயலாளர் கோபால், தெற்கு ஒன்றிய தி.மு.க இளைஞரணி செவல்குளம் குட்டி,மற்றும் பாலமுருகன், அத்திப்பட்டி தினேஷ்குமார், கிளைச் செயலாளர் முனியாண்டி, ஜீவா, ஜெயக்குமார், பாலாஜி உள்பட பலர் கலந்து கொண்டனர்.*

### திருப்பத்தூர் –

# கந்திலி ஒன்றியங்களில் 5 புதிய மின்மாற்றிகள்!

## ஏ.நல்லதம்பி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

*திருப்பத்தூர், டிச.27-*

*திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட கொடுமாம்பள்ளி, மாடப்பள்ளி ஊராட்சி கல்லுக்குட்டை, குரும்பகேரிபுதூர் மற்றும் கந்திலி ஒன்றியத்திற்குட்பட்ட கொரட்டி ஆகிய 5 ஊராட்சிகளிலுள்ள விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையான மின்பற்றாக் குறையை போக்கிடும் வகையில் 5 புதிய மின்மாமற்றிகளை திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.நல்லதம்பி மக்கள் பயன்பாட்டிற்காக துவக்கி வைத்தார்.*

*இந்நிகழ்ச்சியில் அரசு துறை அதிகாரிகள், ஒன்றிய செயலாளர்.கே. ஏ. குணசேகரன், திருப்பத்தூர் ஒன்றிய சேர்மென்.விஜய அருணாசலம், துணை சேர்மென். டி.ஆர்.ஞானசேகரன், ஊராட்சிமன்ற தலைவர்கள். லட்சுமி கார்த்தி கேயன், ஸ்டெல்லாமேரிதேவ சகாயம், கோமதிகார்த்தி கேயன்,*

*கவுன்சிலர்கள்.கஸ்தூரி ரகு, லட்சுமிசந்திரசேகர், வே.அன்பழகன், எல்.சிவ லிங்கம், எஸ்.சரவணன், பி.ஆர்.சின்னபையன், கே.எஸ். தேவேந்திரன், மாது,சக்கரவர்த்தி, தீபாசுப்பிரமணி மற்றும் விவசாயிகள், பொதுமக்கள் கிளை செயலாளர்கள், கழக தோழர்கள் என திரளாக கலந்து கொண்டனர்.*



திருப்பத்தூர் மாவட்டம், என்.வி.எஸ். திருமண மண்டபத்தில் நடைபெற்ற இலவச கண் சிகிச்சை முகாமை மாவட்ட கழக செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ., கலந்துகொண்டு முகாமை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். நிகழ்ச்சியில்நகர செயலாளர் எஸ்.ராஜேந்திரன், திருப்பத்தூர் மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எம்.சிங்காரவேலன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் ராஜா, திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, மாவட்ட துணை செயலாளர் ஆ.சம்பத்குமார், மாவட்ட பொருளாளர் கே.பி.ஆர்.ஜோதிராஜன், பொதுக்குழு உறுப்பினர் சு.அரசு, மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் டி.சந்திரசேகர், திருப்பத்தூர் நகர மன்ற துணைத்தலைவர் ஏ.ஆர்.சபியுல்லா, நகர நிர்வாகிகள் ஸ்ரீதரன், மகாலிங்கம், பத்மநாபன், சௌவுத்அகமத், சுற்றுச்சூழல் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் நாகராஜன், கிருஷ்ணமூர்த்தி மற்றும் கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மருத்துவ குழுவினர்கள் கலந்து கொண்டார்கள்.